| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி. ம.பா.ரூத் சாந்தி.பி.ஏ.,<br>உதவி இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்<br>அலுவலகம், சென்னை – 600 006. | தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள்,<br>சென்னை |

ந.க.எண். 000087 /அ2/2022 நாள் : 15 .03 .2023

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், சென்னை – 6 – மார்ச் / ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு – Acquittance உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைத்தல் – தொடர்பாக

பார்வை சென்னை–6, அரசுத் தேர்வுகள் துணை இயக்குநர் (பொது)(பொ) அவர்களின் கடித ந.க.எண்.002041 / அ4–1/2023 நாள்.10/03/2023.

----

மார்ச் / ஏப்ரல் 2023 மேல்நிலை பத்தாம் வகுப்பு / முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு தொடர்பாக **வினாத்தாள் கட்டுக் காப்பாளர் (Custodian) மற்றும்** பறக்கும் படை **(Squad)**, வழித்தட அலுவலர் **(Route officer)**, **பற்றுச் சீட்டுகளில் கையொப்பம் / முத்திரையுடன் இரு பிரதிகளில் அசலாக , வங்கி புத்தகத்தின் முதல் பக்க நகல்** (மாவட்டக் கல்வி அலுவலர் / தலைமையாசிரியரின் கையொப்பத்துடன்) **தேர்வு முடிவுற்ற 5 நாட்களுக்குள்** கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் தவறாது ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| ஒப்படைக்க வேண்டிய முகவரி |
|---|
| உதவி இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்<br>(கூடுதல் கட்டிடம் முதல் தளம்), டி.பி.ஐ வளாகம்,<br>சென்னை – 600 006 |

உதவி இயக்குநர்

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், சென்னை–8 – தக்க நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்– தக்க நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது. சென்னை தெற்கு , வடக்கு.

**இணைப்பு**

அறிவுரைகள்

## அறிவுரைகள்

1. உரிய படிவத்தில் கணக்குகள் தயார் செய்யப்பட வேண்டும்.
2. தேர்வு மையங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், தேர்வாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு அரசாணை எண். 51 பள்ளிக் கல்வி (அ.தே.இ)த் துறை நாள். 21.03.2018ன் படி உழைப்பூதியம் / மதிப்பூதியம் வழங்கப்பட வேண்டும்.
3. பற்றுச்சீட்டுகளில் பணியாளர்கள் **நீலநிற மை பேனாவால்** மட்டுமே கையொப்பமிட வேண்டும்.
4. பற்றொப்பச்சீட்டுகளில் கையெழுத்து உரிய பயனாளிகளிடம் மட்டுமே பெற்றிருத்தல் வேண்டும். ஒருவருக்காக மற்றொருவர் "for" என குறிப்பிட்டு கையெழுத்திடுவதை முற்றிலும் தவிர்த்தல் வேண்டும்.
5. மேலும், பற்றொப்பச்சீட்டுகளில் அனைத்து பயனாளிகளிடம் கையெழுத்து விடுப்படாமல் பெறப்பட்டுள்ளதா என சரிபார்த்த பின் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையெழுத்து விடுப்பட்ட பயனாளிகளுக்கு தொகை வழங்கப்பட இயலாது எனவும் அறிவுறுத்தப்பட வேண்டும்.
6. ஒருவருக்கு இரு வகையான உழைப்பூதியம் வழங்கப்படுதல் கூடாது. (உதாரணம் ஒரே பயனாளி அலுவலக உதவியாளர் மற்றும் பெருக்குபவர் எள் இரு வகையில் உழைப்பூதியம் பெற அனுமதித்தல் கூடாது).
7. ஒவ்வொரு பக்கத்திற்கும் தனித்தனியாக தொகை கூடுதல் செய்யப்பட வேண்டும்.
8. தேர்வு மையங்களின் செலவின கணக்குத்தாட்களின் ஒவ்வொரு பக்கத்திலும் முதன்மைக் கண்காணிப்பாளர் கையொப்பம், அலுவலக முத்திரையும் பெறப்பட வேண்டும்.
9. வினாத்தாள் கட்டுக்காப்பாளர், பறக்கும் படையினர் மற்றும் வழித்தட அலுவலர்களுக்கான பற்றொப்பச்சீட்டுகளில் **சம்பந்தப்பட்ட முதன்மைக் / மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம்** மற்றும் அலுவலக முத்திரை பெறப்பட வேண்டும்.
10. தேர்வு மைய சில்லரைச் செலவினங்களுக்காக, இவ்வலுவலக கடித ந.க.எண். 130321/அ4–1/2019 நாள்.06.12.2021. ன்படி அனுமதிக்கப்பட்ட உரிய பொருள்கள் மட்டுமே வாங்கப்பட வேண்டும்.
11. சில்லரைச் செலவின பட்டிகளை வெள்ளைத்தாட்களில் ஒட்டி **அசல் மற்றும் நகல்** ஆகிய இரு பற்றொப்ப சீட்டுகளிலும் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரது முத்திரை மற்றும் கையொப்பத்துடனும் மேலும், மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்வு மைய எண் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.